(3) அரசினர் தீர்மானம் (தொடர்ச்சி)

(ஆ) 1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 15/1971) சம்பந்தமான வரைவுத் திருத்தம் குறித்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "1971-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 431-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின்கீழ் அச்சட்டத்தின் III ஆம் அட்டவணையைச் சேர்ந்த III ஆம் பாகத்தின் 17-வது விதியிலுள்ள (d) துணை விதியை மாற்றுவதற்காக தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதியுள்ள கீழ்க்கண்ட வரைவுத் திருத்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

வரைவுத் திருத்தம்

1971-ம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) III ஆம் அட்டவணையைச் சேர்ந்த III ஆம் பகுதியின் 17-வது விதியிலுள்ள (d) துணை விதியின்கீழ் ஒரு நிதி யாண்டிற்கான இறுதித் தணிக்கை அறிக்கையை மேற்படி மாநகராட்சியின் நிலைக்குழுவிற்கும் அதன் நகலை அரசிற்கும் தணிக் கையாளர்கள் பணிந்தனுப்ப வேண்டிய கால அளவு அந்த நிதி ஆண்டு முடிவடைந்ததிலிருந்து எட்டு திங்களுக்குள் இருக்க வேண்டுமென தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் இதனால் அறிவிக்கிறார் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

1972 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சித் சட்டத்தின் 111-வது விவர அட்டவணையைச் சேர்ந்த 111-வது பாகத்தின் 17 (d) விதியில் மதுரை மாநகராட்சி சம்பந்தப்பட்ட கணக்குகளின் தணிக்கை பற்றிய விவர அறிக்கையை நிதி ஆண்டு முடிவிலிருந்து 3 திங்களுக் குள்ளாயினும் அல்லது அரசு அறிவிக்கக்கூடிய வேறு கால அளவிற் குள்ளாயினும் அந்த மாநகராட்சியின் நிலைக் குழுவுக்கும் அந்த அறிக்கையின் இரண்டாவது படியை அரசிற்கும் தணிக்கையாளர்கள் பணிந்தனுப்ப வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது. தணிக்கை யாளர்கள் இறுதித் தணிக்கை அறிக்கை அனுப்புவதற்கு இவ் விதியில் மு 10
குறிப்பிட்டுள்ள 3 திங்கள் கால அளவு மிகக் குறைவு என்று உள்ளாட்சி நிதிக் கணக்கு ஆராய்வாளர் எடுத்துக் கூறி சென்னை மாநகராட்சியில் உள்ளது போல் 8 திங்கள் காலத்தை இதற்கென வரையறுக்கலாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார். இவரது

வேண்டுகோள் நியாயமானதெனக் கருதப்படுகிறது. இதற்கிணங்க, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சித் சட்டத்தின் 17(d) விதியை மாற்றியமைப்பதென்று கருதப்படுகிறது. இச்சட்டத்தில் V, VI விவர அட்டவணைகள் நீங்கலாக, எந்த ஒரு விவர அட்டவணையையும் திருத்தியோ, சேர்த்தோ அல்லது ரத்து செய்தோ 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 431-வது பிரிவைச் சேர்ந்த (3) உட்பிரிவின் கீழ் அரசு விதிகள் இயற்றலாம். ஆனல், 111-வது விவர அட்டவணையின் 111-ம் பாகத்தில் 17 (d) விதியை மாற்றியமைத்ததற் காகச் செய்யக் கருதியுள்ள ஒரு திருத்தத்தின் வரைவு இந்தச் சட்டத் தின் 431 பிரிவின் (5) உட்பிரிவின்படி சட்டமன்ற இரு அவைகளின் முன் வைக்கப்பட்டு அவற்றின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

இதற்கிணங்க செய்யக் கருதியுள்ள வரைவுத் திருத்தத்திற்கு இம் மன்றம் ஒப்புதலளிக்குமாறு வேண்டுகிறேன்.

இதிலே முக்கியமானது, தணிக்கையாளர்கள் கணக்கைத் தணிக்கை செய்து மூன்று மாதங்களுக்குள் அரசுக்கு வர வேண்டு மென்று மதுரை மாநகராட்சிச் சட்டத்தில் இருக்கிறது. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 8 மாத காலம் அளிக்கப் பட்டிருக்கிறது. இந்த மூன்று மாத காலம் போதாது, சென்னையைப் போல் 8 மாத காலம் கொடுத்தால்தான் முறையாக வைக்க வாய்ப்பு ஏற்படும் என்று கேட்டிருக்கிறார்கள். மதுரை மாநகராட்சிக்கு அந்தக் கால அளவைத் தருவதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதனை நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இக் கூட்டத் தொடர் இன்றோடு முடிவடைகிறது. பேரவை காலவரை யறையின்றி ஒற்றிவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை காலவரையறையின்றி பிற்பகல் 1.03-க்கு ஒற்றி வைக்கப்பட்டது.